# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ரிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

## உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

18. கா.புவனேஸ்வரி - சங்க கால உணவு முறைகள் 86
19. அ.மகபூப - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் 91
20. மகேஸ்வரி - சிறுகதை இலக்கியம் 95
21. து.விசாலாட்சி - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை 99
22. ஜெ. வினோதினி - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை 104
23. வேணுகோபால் - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் 107
24. நா.ஸ்ரீ பிரியா - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் 111
25. ஷரிமளாதேவி - காட்டுப் பூக்களின் கானங்கள் 115

# அற இலக்கியங்களில் கல்விக்கோட்பாடு

**ப.பிரதாப்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் கொண்டு, ஐந்து அல்லது அதனினும் குறைந்த அடிகளால் ஆன வெண்பாக்களால் இயன்ற நூல்களைக் கீழ்க்கணக்கு என்பர். இவற்றில் அறஇலக்கியங்களே அதிகம். கல்வி என்பது மனிதனை உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். அக்கல்வி இச்சமுதாயத்தை உயர்த்திட வேண்டும். எனவே தான் பாரதியார், **"பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்"** என்கிறார். அவ்வகையில், கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள கல்விச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கல்விச்சிறப்பு**

இவ்வுலக இன்பத்தைத் தருகின்ற கல்வியைப் பிறர்க்குத் தருவதால் குறையாது. இக்கல்வி புகழைக் கொடுத்து அறியாமையை அறுக்கும் மருந்தாகவும் இருக்கிறது. இதனை,

**"இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால் .......**
**...................மம்மர் அறுக்கும் மருந்து" - (நாலடி-132)**

என்கிறது நாலடி. மேலும்,

**" குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்**
**கல்வி அழகே அழகு" - (நாலடி-131)**

என்ற பாடலில் தலைமுடியைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவுநிலையால் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாம். என்று கல்வியின் சிறப்பையும், பெண்கல்வி குறித்தும் கூறப்பட்டுள்ளது. மேலும்,

**"கைப்பொருள் தன்னில் மெய் பொருள் கல்வி" - (கொன்றை-22)**

என்று ஔவையும் கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறுகிறார்.

இத்தகைய கல்விச் செல்வத்தை யாரலும் அழிக்கவியலாது. அதை வெள்ளமும் கொண்டு போகாது. நெருப்பாலும் அழிக்க முடியாது என்பதை ஒரு தனிப்பாடல்,

**"வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது**

**வேந்தராலும் கொள்ளத் தான் முடியாது"**

என்று குறிப்பிடுகிறது. இங்ஙனம் கல்வியின் அழியாச் சிறப்பை அறியமுடிகிறது.

**கற்றலின் அவசியம்**

கல்வி கற்பது ஒன்றே ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு நன்மையைத் தரும். கல்வி மட்டும்தான் நன்மையைத் தரும் என்றால் அந்தக் கல்வியை எந்த வகையிலாவது பெற வேண்டும் அல்லவா? கல்வி கற்பதற்கு பொருள் திரட்ட வேண்டும். முயற்சி செய்தும் பொருள் திரட்ட இயலவில்லை என்றால் அவர்களால் கல்வி கற்க இயலாது அல்லவா? அவர்கள் கல்வி கற்க வேண்டாமா? இதற்கு,

**"கற்கை நன்றே! கற்கை நன்றே!**

**பிச்சை புகினும் கற்கை நன்றே! - (வெற்-35)**

**"பிச்சை புக்காயினும் கற்றல் மிக வினிதே" - (இனியவை-1:1)**

என்னும் வரிகள் விளக்கம் தருகின்றன.

**"பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய**

**கற்றலின் காழ் இனிது இல்" – (இனியவை-40:3-4)**

பலநாளும் பழுதின்றி நன்மை தரும் நூல்களைக் கற்றல் இனிது என இனியவை நாற்பது குறிப்பிடுவதிலிருந்து பயனுள்ள நூல்களையே தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டுமென்பதை அறியமுடிகிறது. கல்வியை விரும்பிக் கற்றல் வேண்டும் என்பதை ஆத்திச்சூடியின், **"இளமையில் கல்(29) - ஓதுவது ஒழியேல்(11) - வித்தை விரும்பு(101)"** போன்ற வரிகள் புலப்படுத்துகின்றன. உயிருக்கும் மேலான கல்வியைக் குருவிடம் பணிவோடும், வெறுப்பின்றியும் கற்க வேண்டுமென்பதை,

**"பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" - (புறம்-183:2)**

எனப் புறநானூறு குறிப்பிடுவதும் இங்கு எண்ணத்தக்கது. மேலும், ஒரு மனிதன் இப்பிறவியில் கற்றகல்வி புகழைத் தருவதோடு மட்டுமல்லாமல் ஏழேழ் பிறவிக்கும் அவனுக்கு பாதுகாப்பாக இருக்கும் இதை வள்ளுவர்,

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து" - (குறள்-398)**

என்ற குறளின் மூலம் விளக்குகிறார். மேலும், கல்வியில் எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று கூறப்படுவதுமாகிய இரண்டும் இவ்வுலகில் வாழும் உயிர்க்கு கண் போன்றது இதையே,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - (குறள்-392)

என்ற குறள் விளக்குகிறது. இக்கருத்தையே ஔவையும், "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" (கொன்றை-7) என்று பாடுகிறார். இதை அப்பர் சுவாமிகளும் தேவாரத்தில் குறிப்பிடும்பொழுது எண்ணும் எழுத்துமாக இருக்கக்கூடிய பரம்பொருளை,

"எண் அவன் காண் எழுத்து அவன் காண் இன்பக்
கேள்வி இசை அவன் காண்"
- (திருத்தாண்டகம்- 485:3-4)

என்று போற்றுகிறார். இங்ஙனம் கல்வியின் அவசியத்தை பல இலக்கியங்கள் பறைசாற்றுவதை உணரமுடிகிறது.

**கற்றவரே உயர்ந்தோர்**

நமது சமுதாயத்தில் குலத்தால் உயர்வு, தாழ்வு பார்க்கும் இழிநிலை இருக்கிறது. குலத்தை நான்காகப் பிரித்து வைத்துள்ளார்கள். அவை, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பவை. இந்த நான்கு குலத்திலும் அந்தணரை உயர்ந்தோர் என்றும், அடுத்த நிலையில் அரசர்கள் என்றும், அதற்கும் அடுத்த நிலையில் வணிகர்கள் என்றும், கடைநிலையில் வேளாளர்கள் என்றும் வரிசைப்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் தரவரிசையில் முதலில் இருக்கும் அந்தணர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் கல்வி அறிவு பெறவில்லையென்றால், அவனும் கீழ்க் குலத்தைச் சேர்ந்தவனாகவே கருதப்படுவான் இதை,

"நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே" - (வெற்-37)

"எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பர்" - (வெற்-38)

ஆகிய வரிகளில் விளக்குகிறார் அதிவீரராமபாண்டியர். மேலும், கற்றவர்களுக்கு கல்வியே அழகாக விளங்குகிறது. அவர்களுக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் வேண்டியது இல்லை இதனைக் குமரகுருபரர்,

"கற்றோர்க்கு கல்வி நலனே கலன் அல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்" - (நீதிநெறி-13)

என்று விளக்குகிறது. இங்ஙனம், கற்றவர்களுக்கு கல்வியே அழகாக விளங்குகிறது. கற்றவர்கள் இல்லாத ஊராலும் எந்தப் பயனும் இல்லை என்பதை நல்லாதனார்,

"கணக்காயர் இல்லாத ஊரால் நன்மை இல்லை"
- (திரி-10:1)

என்கிறார். இங்கு, கல்வியறிவு பெற்றவர்களே இவ்வுலகில் அனைத்து நிலையிலும் உயர்ந்தோர் என்பது புலப்படுகிறது.

**கல்லாமை**

கல்வியறிவில்லாதவன் எதற்கும் பயனற்றவன். எனவேதான், உலகநாதர் **"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" (உலகநீதி-1:01)** கல்வியறிவற்றவன் தனது குலத்தின் பெருமையை கற்றவர்களிடம் பேசுவதால் அவனுக்குப் பெருமை வந்து சேராது. இதை உணராமல் கல்லாத ஒருவன் தனது குலப்பெருமையைப் பேசினால் அவன் 'பதர்' ஆகக் கருதப்படுவான் என்பதை,

**"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்**
**நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே" - (வெற்-36)**

என்கிறது வெற்றிவேற்கை. கல்லாமலிருப்பது பிறவிக்குப் பயனளிக்காது இதை விளம்பிநாகனார்,

**"தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு" - (நான்மணி-22:4)**

என்ற வரியில் இப்பிறவியெடுத்ததற்கு தனக்குப் பாழாக அமைவது கல்வியறிவு பெறாத வெறும் புலாலுடம்பு உள்ளமையாம் என்று விளக்குகிறார்.

**முடிவுரை**

அறஇலக்கியங்கள் கல்வியின் அழகே அழகு எனக் கல்விச் சிறப்பினையும், எப்பொருளைக் கொடுத்தாவது கல்வி கற்பதே சிறந்தது எனக் கற்றலின் அவசியத்தையும், அனைத்து நிலைகளிலும் கற்றல் நிலையே உயர்ந்தநிலை என்பதையும் குறிப்பிட்டுள்ளது. மேலும், கல்லாத மனிதர்கள் இவ்வுலகில் கீழ்நிலையில் வைக்கப்படுவர் என்னும் சிந்தனையையும், கல்லாமையால் விளையும் தீங்கையும் எடுத்தியம்புகிறது. இங்ஙனம் அறஇலக்கியங்களில் கல்விக் கோட்பாட்டுச் சிந்தனைகள் விரவிக் கிடப்பதை, இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

அறம் பதிப்பகம்

ISBN: 978-93-86770-84-4